# பிரேமதாஸவின் மோதல் மனப்போக்கே இந்தியாவுடன் கசப்பை உருவாக்கியது

பக்கங்கள் நான்கு     விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05  ஒலி 300  பிரசோற்பத்தி கார்த்திகை 23  (09 - 11 - 1991)  சனி

## ‘சார்க்’ மாநாடு குழம்பியதற்கு அரசேகாரணம்எனவும் அநுரா

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அயல் நாடுகளுடனான நிலையினை மோதிப் பார்க்கும் வகையில் கைக்கொள்வதாலேயே இந்தியாவுடன் கசப்புணர்வு உண்டானது'' என்று எதிர்க்கட்சிகள் தரப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று குற்றஞ்சாட்டினார். கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் பேசிய அவர், ''சார்க் மாநாடு குழம்பியதற்கு பிரேமதாஸ அரசின் தப்பான நடவடிக்கையே காரணம்'' என்றும் கூறிய அவர் மாலைதீவில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் ஸ்ரீலங்காவில் இந்திய அமைதிப்படை இருப்பதினைக் —04 ஆம் பக்கம் பார்க்க

ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பாகத் தூதுவர் ஜாவும் சமுகமான நிகழ்ச்சியில்

# இந்திய அரசைக் கண்டித்து பாக். பிரதமர் கொழும்பில் உரை!

''ஜம்மு-காஷ்மீரில் வாழும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்'' என்று பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷெரீப் ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கருத்து வெளியிட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே புகைந்து கொண்டுள்ள பகைமை யுணர்ச்சியை அவரது இப் பேச்சு வலுப்படுத்துவதாகவே அமையும் என கொழும்பில் அரசியல்வட்டாரங்கள்கருத்து வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் பிரதமர் இக் கருத்தை வெளியிட்ட நிகழ்ச்சியில் ஸ்ரீலங்காவுக்கான இந்தியத் தூதுவர் எல், என்.ஆர் ஜாவும்சமுகமளித் திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் பிரதமர் ஸ்ரீலங்காவில்வெளியிட்டுள்ள இக் கருத்துக் குறித்து தூது —04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா - பாகிஸ்தான் தலைவர்கள் இணக்கம்

சார்க் மாநாடு தொடர்பான சட்டவரைவுகளை மாற்றுவது தொடர்பாக ஸ்ரீலங்கா ஜனாதிபதியும், பாகிஸ்தான் பிரதமரும்இணக் —04 ஆம் பக்கம் பார்க்க

## இரு நாட்டு தலைவர்கள் கொழும்பிலிருந்து புறப்பட்டனர்

கொழும்பு வந்திருந்த பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதாஸியாவும் மாலைதீவு ஜனாதிபதி கயூமும் நேற்று மாலை தாயகம் திரும்பினர்

முன்னதாக இவர்கள் ஜனாதிபதி பிரேமதாஸவுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது

## தனியார் கடைகள் மூலமாக உணவுப் பொருள் விநியோகம்

தனியார் வர்த்தகர்கள்மூலமாக உணவுப் பொருள்களை விநியோகிக்க யாழ் அரசாங்க அதிபர் உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருள் பட்டியலை உடன் சமர்ப்பிக்க வேண்டும்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் சகல வர்த்தகர்களும் உடனடியாக தம்மிடமுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களின் இருப்பு பட்டியல்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பாவனையாளர் பாதுகாப்புக்குழு விடம் சமர்ப்பிக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு தபால் விநியோகம்

வெளிநாட்டுத்தபால்கள் இன்று யாழ் பிரதம தபாலகத்தின் பிரிவில் விநியோகிக்கப்படவுள்ளன.

நேற்று வெளிமாவட்டத் தபால்கள் விநியோகிக்கப் பட்டன. 06

## ஒரு நாள் சார்க் மாநாடு கயூம்-பிரேமா ஆலோசனை

தடைப்பட்ட ஆறாவது கொழும்பு சார்க் மாநாட்டை ஒரு நாள் மாநாடாக விரைவில் கொழும்பில் நடாத்துவது குறித்து நேற்று மாலைதீவு ஜனாதிபதி கயூமும் ஜனாதிபதி பிரேமதாஸவும் பேச்சு —04 ஆம் பக்கம் பார்க்க

## பால்மா விற்க இருந்ததடை இன்று முதல் நீக்கப்பட்டது

குழந்தைகளுக்கான பால்மா விற்பதற்கு இருந்த தடை இன்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக அரச அதிபர் அறிவித்தார்.

இதன்படி அங்கர், லக்ஸ்பிறே, எல். எம். ஏ, நெஸ் —04 ஆம் பக்கம் பார்க்க

அரச அதிபர் விளக்கம்

## புதிய பங்கீட்டு நடைமுறையே பட்டினியை தவிர்க்க உதவுகின்றது

''அரசாங்கத்தின் மூலம் கப்பல்களில் அனுப்பிவைக்கப்படுகின்ற உணவுப் பொருள்களின் தொகை மக்களுக்கான தேவையில் ஏறக்குறைய முப்பது தொடக்கம், நாற்பது வீதம் மாத்திரமே ஈடு செய்யக் கூடியதாக உள்ளது'' என்று யாழ் அரசாங்க அதிபர் திரு கே.மாணிக்கவாசகர் தற்போதைய உணவு இருப்பு —04 ஆம் பக்கம் பார்க்க

### ● கேள்விக்கொத்து மதிப்பில் தகவல்

# மீண்டும் இலங்கை திரும்ப ஈழ அகதிகள் பலர் விரும்பவில்லை!

மீண்டும் இலங்கை திரும்புவதற்கு தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழ அகதிகளில் பெரும்பாலானோர் விருப்பமற்றவர்களாக உள்ளதாக அங்கு அகதி முகாம்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

தமிழகத்தில் தங்கியுள்ள 53561 ஈழ அகதிகளிடம் கேள்விக்கொத்து மூலம் அண்மையில் தமிழக அரசு மதிப்பீடொன்றை மேற்கொண்டிருந்தது.

இந்த 53561 பேரில் 16,563 பேர் மீண்டும் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்தனர். 36998 பேர் தாங்கள் தற்பொழுது இலங்கை திரும்ப விரும்பவில்லை எனத் தெரிவித்தனர்.

'வட-கிழக்கில் மீண்டும் நிலைமை சீரானதும் நாமாகவே அங்கு திரும்புவோம் இந்திய அரசின் வற்புறுத்தலின் பேரில் இப்போது அங்கு திரும்ப நாம் விரும்பவில்லை' என அவர்களில் சிலர் அக்கேள்விக்கொத்தில் குறிப்பெழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் மட்டத்திலான கூட்டத்தில் இக்கேள்விக்கொத்துக் கணிப்பு சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

இறுதியில் தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகளின் முதற் தொகுதியினரை டிசம்பர் மாதம் நடுப் பகுதியில் திருமலைக்குத் திரும்பி அனுப்புவதென அங்கு முடிவு செய்யப்பட்டது.

## 38 உள்ளூராட்சி ஊழியருக்கு ஜனவரி முதல் இடமாற்றம்

வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சேவைத் திணைக்கள ஊழியர்களுக்கு வருடாந்த இடமாற்றத்தை அமுல்படுத்துவதென இடமாற்றச் சபை தீர்மானித்துள்ளது.

இம் முடிவுக்கமைய வட-கிழக்கு உள்ளூராட்சி ஊழியர்களுக்கான 38 பேரின் பெயர்கள் அடங்கிய இடமாற்றப்பட்டியல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்கள் 01. 01. 92 முதல் செயற்படுமெனவும் மேன்முறையீடுகள் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் செய்யப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் அதிகாரிகள் இருவர் வவுனியாவுக்கு விஜயம்

பிரிடிஷ் தூதரக உயர் அதிகாரிகள் இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் வவுனியா அரச அதிபர் மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து நிலைமைகளை அறிந்து கொண்டனர்.

தாண்டிக்குளம் தடை முகாம், அகதிமுகாம்கள் பலவற்றிற்கும் சென்று நிலைமைகளை இவர்கள் பார்வையிட்டனர்.

வவுனியாவில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண வேலைகளுக்கு பிரிட்டன் அளிக்கும் நிதி உதவி எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றி அறிந்து கொள்ளவே இவர்கள் அங்கு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய அமைப்பு உருவாகும்

இலங்கையில் கலை, இலக்கியம், பண்பாடு, தமிழியல் தொடர்பான சகல அமைப்புக்களையும் ஒன்றுகூட்டியதாய் புதிய அமைப்பொன்று உருவாக்கப்படவுள்ளது.

இதுபற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று 10 ஆம் திகதி காலை கொழும்பு இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## மாவீரர் நினைவுக் குறிப்புகள் மக்கள் பார்வைக்கு

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ் குடாவிலுள்ள முக்கிய கேந்திர நிலையங்களுக்கண்மித்த சுவர்களில் மாவீரர்களைப் பற்றிய குறிப்புகள் எழுதப்பட்டு வருகின்றன.

அத்துடன் மாவீரர் பற்றிப் புகழ் பாடும் கவிதைகளும் எழுதப்பட்டுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை தமிழீழப் பிரதேசமெங்கும் மாவீரர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

## தெருச் சுற்றியார் அவதானித்த மாவீரர் அலங்காரங்கள்

காங்கேசன்துறை வீதி சுன்னாகம், இலங்கை வங்கிக்கு அண்மையிலும், சுன்னாகம் சந்தியிலிருந்து மல்லாகம் நோக்கி கிட்டத்தட்ட 60 மீற்றர் தொலைவிலும், சுன்னாகம் சந்தை அருகாமையிலும் மூப்பெரும் மாவீரர் அலங்கார வளைவுகள் நிமிர்ந்து நிற்கின்றன. உற்று நோக்கிய போது. ''என்னை என் மண்ணில் புதைத்தாய் பகைவா. என் மண்ணை எங்கே புதைப்பாய்'' என்று பொறிக்கப்பட்ட வசனம் என் நெஞ்சத்தைத் தொட்டது. அங்கே விழித்துப் பார்த்த போது மாவீரனைச் சுமந்தபடி வீரநடை போடும் போராளிகளின் சித்திரமும், ஆனையிறவு முகாமில் போராளிகளின் துணிவான தாக்குதல் சித்திரமும், சித்திரிக்கப்பட்டுள்ளதை அவதானித்தேன்.

— தெருச் சுற்றியார்

## கழிவகற்றும் வேலையில் மனிதரை ஈடுபடுத்த இந்தியாவில் தடை

தோட்டி வேலையை மனிதர்கள் செய்வதை ஒழிக்கும் மாநிலங்களுக்கு தேசியவிருது வழங்கப் போவதாக இந்திய மத்தியஅரசு அறிவித்துள்ளது.

மனிதர்களை இப்பணியிலிருந்து விடுவித்து துப்புரவுப் பணிகளுக்கு குறைந்த செலவில் மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் மாநிலங்கள் இவ்விருதைப் பெறவுள்ளன.

அத்துடன் மலத்தை எடுத்துச்செல்ல மனிதர் மற்றொரு மனிதரைப் பயன்படுத்துவதை குற்றமாக்கக்கூடிய வகையில் இந்தியச் சட்டமும் திருத்தியமைக்கப்படவுள்ளது.

மனிதாபிமானமற்ற இப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்படும் துப்புரவுப் பணியாளர்களுக்கு வேறு துறைகளில் மறுவாழ்வு வழங்கப்படவுள்ளது.

## நல்லூரில் இன்று கூட்டம்

''நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமிய பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களின் கூட்டமொன்று இன்று சனிக்கிழமை காலை 10. 30 மணிக்குத் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சகல கிராமிய பாவனையாளர் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்களையும், கிராம அலுவலர்களையும் பிரதேச பாவனையாளர் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்களையும் சமுகமளிக்குமாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

## ஓட்டுநர்களைப் பாதுகாக்க புதிய 'சேப்ரி பலூன்'

வாகன விபத்துக்களின்போது சாரதிகளைப் பாதுகாக்கும் புதிய 'சேப்ரி பலூன்' ஒன்று மேலைநாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காற்றுப் பையை வாகன ஓட்டுநர் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும். விபத்து ஒன்று ஏற்படும் பட்சத்தில் 30 மில்லி செக்கண்டுகளுக்குள் இந்தப் பையில் காற்று நிரம்பி விடுவதினால் விபத்தின் மூலம் வாகன ஓட்டுநர்கள் அடையும் அதிர்ச்சியினை இந்த இராட்சத பலூன் குறைத்து விடும். இதனால் அவர்களுக்கு ஏற்படும் காயத்தின் அளவும் குறைக்கப்படுகின்றது.

## காலியில் சுருட்டு லொறி விபத்தில் யாழ் இளைஞர் பலி!

யாழ்ப்பாணத்திலிருந்து சுருட்டு ஏற்றிச்சென்ற லொறியொன்று காலிக்கு அருகே தல்பே என்ற இடத்தில் வீடொன்றில் மோதி விபத்துக்குள்ளானது.

அந்த லொறியில் பயணம் செய்த மகேந்திரன் (26) என்ற இளைஞர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

அவரது சடலம் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் எடுத்துச் செல்லப்பட்டது.

## குடும்பத்திற்கு இரண்டு கிலோ நாட்டரிசி கிடைக்கும்

தற்போது உலர் உணவு அட்டைக்குப் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் ஊத்தைச் சம்பா பச்சை அரிசியில் இரண்டு கிலோ அரிசியை குத்தரிசியாகப் பெற்றுக் கொள்வதற்குப் பாவனையாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் ப. நோ. கூ. சங்கக் கிளையில் ஒரு கிலோ குத்தரிசி ரூபா 31 ஆக விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

(41, 48,

## 'கென்விட்டா' புதிய பானம்

உபாலி நிறுவனமான கன்டோஸ் சொக்லேட் நிறுவனத்தினர் 'கென்விட்டா' என்ற சொக்லேட் சுவை நிறைந்த புதிய பானமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ஆரம்பத்தில் இப்பானம் 400 கிராம், 30 கிராம் பக்கட்டுக்களாகச் சந்தைப் படுத்தப்படவுள்ளன. 400 கிராமின் கொழும்பு விலை 39 ரூபா 50 சதமாகும்.

## 'அரசியல் வாதிக்கு தாலாட்டு' பாட நூலிலிருந்து நீக்கம்

தமிழகப் பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழ்த்துறை பாடநெறியில் உள்ள ஒரு கவிதையை நீக்கி விடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

'அரசியல் வாதிக்கும் ஒரு தாலாட்டு' என்ற தலைப்பிலான இந்தக் கவிதையை மறைமுகமாக முதலமைச்சர் ஜெயலலிதாவையே சுட்டிக்காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பும் ஒரு கவிதை இந்தியப் படைகளை இழிவுபடுத்துகிறது எனக் கூறி பாடநெறியிலிருந்து நீக்கத் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது'

## முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இப்போது கட்சி மாறுகிறார்கள்

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களை ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களாக மாற்றும் நடவடிக்கைகள் தெற்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் கிழக்குப் பகுதியிலும் எடுக்கப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டியில் மட்டும் இதுவரை 250க்கும் மேற்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களாகினர்.

# சிறிய செய்திகள்

## ஸ்கந்தா வெற்றிபெற்றது

கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரிக்கும் இடையிலே நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் 1 ஆம் பிரிவின் அணியினர் 6 - 1 என்ற கோல் கணக்கிலும் 2 ஆம் பிரிவு அணியினர் 3 - 0 என்ற கோல் கணக்கிலும் யாழ் மத்திய கல்லூரியை வென்றனர். 3 ஆம் பிரிவு அணியின் ஆட்டத்தில் இரு பகுதினரும் எதுவித கோல்களையும் போடாது ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது (21)

## இலக்கிய சேவையை பாராட்டி விழா

எழுத்தாளரும், வைத்திய கலாநிதியுமான எம். கே. முருகானந்தனின் இலக்கிய சேவையைப் பாராட்டி இலங்கைச் சைவ மன்றம், பருத்தித்துறை பார்வதவர்த்தனி கலாமண்டபத்தில் பாராட்டு விழாவொன்றை அண்மையில் நடாத்தியது. (11)

## 37 ஆவது மகாநாடு கொழும்பில்

ஐக்கிய தேசியக் கட்சியின் 37 ஆவது மகாநாடு கொழும்பில் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உழுந்து, பயறு கொள்வனவு

தனியார் வர்த்தக நிலையங்களில் உள்ள கௌபி, உழுந்து, பயறு போன்ற சில தானியங்கள் விற்பனை செய்யப்படாமல் இருப்பதால் அவை பழுதடைந்து பாவனைக்கு உதவாமல் போய்விடும் எனப் பல வர்த்தகர்கள் கேட்டுக் கொண்டதையடுத்து அவற்றை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் கொள்வனவு செய்வதற்கு யாழ் அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்

குழந்தைகளுக்கான பால்மா வகைகளும் தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலமாக வழங்கப்படவுள்ளன (41)

## நடமாடும் பயிற்சி நிலையம்

யாழ் தொழில் திணைக்களம் நடமாடும் தையல் பயிற்சி நிலையத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள புலோலி உபய கதிர்காமத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. (11)

## 'லீக்' போட்டிகள்

இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாவீரர் வாரத்தை முன்னிட்டு கடற்புலிகளால் நடாத்தப்படும் 'லீக்' முறையிலான உதைபந்தாட்டப்போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான பொழுது கடற்புலி ஸ்ரனி புலிக்கொடியை ஏற்றிச் சம்பிரதாய முறைப்படி போட்டியைத் தொடக்கி வைத்தார்.

அன்று இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை ஆறுக்கும் பூஜ்ஜியம் என்ற கோல்கள் கணக்கிலும், குருநகர் பாடுமீன் அணி, வைக்கிங்ஸ் அணியை நாலுக்கும் பூஜ்ஜியம் என்ற கோல்கள் கணக்கிலும் வெற்றியீட்டின.

இவ் ஆட்டங்களுக்கு தீர்ப்பாளர்களாக எம். பிறான்சிஸ், ஏ. தேவராசா, கப்ரின் டீ. ஏ. எம் குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

## சென் அந்தனிஸ் வெற்றி பெற்றது

அரியாலை தெற்கு காந்தி சனசமூக நிலையம் ''தீபஒளி'' திருநாளைமுன்னிட்டு ஒழுங்கு செய்த கண்காட்சி செற்அப் முறையிலான கரபந்தாட்டப் பந்தயத்தில், பாஷையூர் சென் அந்தனிஸ் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியை 15: 8, 15: 3, 16; 01 என்ற புள்ளிகள் கணக்கில் மூன்று நேர் செற்றுகளால் தோற்கடித்தது.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் பார்த்து ரசித்த இப்போட்டிக்கு கே. இராசரத்தினம், கே. ஏகாம்பரம் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினார்கள். (16

## நீரிழிவு நோய் பரிசோதனை

நீரிழிவு நோய் சம்பந்தமாக மக்கள் கவனத்தை ஈர்ப்பதற்கான கருத்தரங்கொன்றும், பரிசோதனையும் இன்று 9 ஆந் திகதி சனிக்கிழமை காலை 8 30மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாயபீட மண்டபத்தில் வலி வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் அனுசரணையுடன் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இக் கருத்தரங்கிலும் பரிசோதனையிலும் கலந்து கொள்ள விரும்பும் பொது மக்கள் சுன்னாகம் லயன்ஸ கழகச் செயலாளருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## செயலக தொடர்பு அதிகாரி

சங்கானை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய த. வைத்திலிங்கம் யாழ் அரச செயலகத்தின் பொதுசனத்தொடர்பு அதிகாரியாகவும், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

பொதுசனத் தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றிய நித்தியராஜ் யாழ் உதவி அரச அதிபராக நியமனம் பெற்றுப் பின்னர் கொழும்புக்குச் சென்றதிலிருந்து இப்பதவி வெற்றிடமாக இருந்தது (25)

## மௌனத்துறவு

10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பெரியவிளான் ''சிவயோக சுவாமி தவ நிலையத்தில்'' மௌனத்துறவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தியான முறைப் பயிற்சி அளித்து திரு இ.திருநாவுக்கரசு தியானம் பற்றி அங்கு சொற்பொழிவு ஆற்றுவார்.

## அதிபர் ஆசிரியர் கருத்தரங்கு

வேலணைக் கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்களையும், ஆசிரியர்களையும் நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில்நடக்கவிருக்கும் கருத்தரங்கிற்கு தவறாது சமூகமளிக்கும் வண்ணம் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்"

## அபிவிருத்திக்கழக அங்குரார்ப்பணகூட்டம்

வேலணைக் கல்விக்கோட்ட கல்வி அபிவிருத்திக்கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு யாழ் வைத்திஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடக்கவிருப்பதால் வேலணைக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பொருளாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## மல்லாகத்தில் கிளினிக்குகள்

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் கிளினிக்குகள் இன்று முதல் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் இயங்க உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

செவ்வாய்க் கிழமைகளில் பொதுமருத்துவ கிளினிக்குகளும், வியாழக் கிழமைகளில் குழந்தைகள் கிளினிக்கும், சனிக்கிழமைகளில் சலரோக கிளினிக்கும் காலை நேரங்களில் இயங்கவுள்ளன. திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பிற்பகலில் ஏழாலை மருந்துச்சாலையின் கிளை இங்கு நடைபெறும்.

---

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய, நாதஸ்வர கானவாரிதி வீ. கே. பஞ்சமூர்த்தியின் நாதஸ்வர 'இசை அருவி' ஒலிப்பதிவு நாடா அண்மையில் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழா நிகழ்ச்சிகளை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

# 'எங்கள் குழலிலிருந்து வீரம்! உங்கள் குழலிலிருந்து நாதம்'!

வெளியீட்டு விழா யாழ் இந்து மகளிர் கல்லூரி அரங்கில் 2-11-91 இல் நிகழ்ந்தபோது போர்க் காலச் சூழ்நிலையில் தாம் அனுபவிக்கும் கஷ்டங்களையெல்லாம் மறந்து மக்கள் திரண்டு வந்து பங்கு பற்றியது இசை மேல் அவர்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியது.

யாழ் தளபதி செந்தோழன் அவர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் நிர்வாகச் செயலாளர் மாறன் அவர்களும் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத் தலைவர், கவிஞர் புதுவை இரத்தின துரை அவர்கள் கலைஞர்களால் நாடு வளம் பெறும், நாடு சுகம் பெறும். அதனால் இசை நாடாக்கள் தொடர்ந்து வெளிவரும் என்றார். முன்னர் மலேசியா முதலிய இடங்களிலிருந்து இங்கு வந்தன. இன்று நாங்களே வெளியிடுகின்றோம். மக்கள் உள்ளங்களில் உணர்ச்சியூட்ட வல்லது இசை. நாட்டை வென்றெடுக்கவும், பின் அந்த நாட்டை வளப்படுத்தவும் வல்ல பல திட்டங்கள் எம்மிடம் உண்டு நீங்கள் எல்லோரும் அப்பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இத்தகைய ஓர் ஆக்கப் பணிக்கு இசைந்து நாதஸ்வர கான மிசைத்த பஞ்சமூர்த்தி அவர்களையும், அவர் அப்பணியில் ஈடுபட அனுமதியளித்த அவருடைய தமையனார் கான மூர்த்தி அவர்களையும் எமது கழகத்தின் சார்பில் வாழ்த்துகிறேன் என்றார்.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமது வெளியீட்டுரையில், 15 ஆண்டுகளுக்கு முன் எகிப்திய விடுதலை முன்னணி லண்டனில் எடுத்த ஒரு இசைவிழா பற்றிக் குறிப்பிட்டார். அவர்களது போராட்ட விவரணப் படத்தில் போராட்டத்தின் சகல அம்சங்களிலும் இசையே சம்பந்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அதன் பொறுப்பாளருடன் அது பற்றிக் கேட்டபோது தமது போராட்ட எழுச்சி தீவிரமடைந்ததற்கு அது கலைகளுடன் முக்கியமாக இசையுடன் இணைந்தமையே காரணம் என்று அவர் தெரிவித்தார் என்றார்.

விடுதலை என்பது மண்ணை மீட்க, அரசமைக்க மாத்திரமன்று நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து மனித சமூகம் விடுதலைக்காகப் போராடி வருகின்றது. ஆன்மீகத்தின் தேடுதல் முயற்சியும் விடுதலையே புரட்சிகர இயக்கம் புகட்டும் விழிப்புணர்வும் விடுதலையே, இயற்கையில் பிரபஞ்சத்தில் ஒரு ஒத்திசைவு இருக்கிறது அதைப் 'பிரபஞ்ச கானம்' எனலாம். ஆன்மாவின் உள்ளுணர்வும் இசை மயமானது. கலை விடுதலையோடு சம்பந்தப்பட்டது. எமது போராட்டம் ஆழமான, காத்திரமான பரிமாணங்களைக் கொண்டது என்றார்.

அடுத்துப் பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. பங்கேற்ற கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. யாழ் மாவட்டச் சிறப்புத் தளபதி தமிழ்ச் செல்வன் (தினேஷ்) பரிசில்களை வழங்கினார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா அவர்கள் தமது உரையில் இந்த இசையருவி வெளியீடு தேசத்தின் உணர்ச்சிக் குவியலின் வெளியீடாகும். மக்களைத் தட்டி எழுப்ப வல்லது இசை. தொட்டிலில், வயலில், கடலில் எங்கும் இசையே ஆதிக்கம் செலுத்துவதைக் காண்கின்றோம். நாடி, நரம்புகளைத் தட்டிக் கொடுத்து நெறிப்படுத்தக் கூடிய ஆற்றல் இசைக்குண்டு. இன்று நோயைக் குணப்படுத்தவும் ஏன் தாவரங்களின் வளர்ச்சிக்குங் கூட இசையைப் பயன்படுத்த முயல்வதைப் பார்க்கின்றோம். இதனாலேயே ஏனைய கலைஞர்களுக்கில்லாத தனி மதிப்பை இசைக் கலைஞர்கள் பெறுகின்றார்கள். நாங்கள் எமது வரலாற்றை எழுதப் புறப்பட்டு விட்டோம். இரத்தத்தால் எழுதுகின்றோம். இது தொடர வேண்டும். அதற்காகவே 'பொங்குங் கடற்கரை' எனத் தொடங்கும் அருவி 'தொட்டிலை விட்டுத் துள்ளியெழு' என்று இசைத்துச் செல்கிறது என்றார்.

செயலதிபர் யோகரத்தினம் யோகி அவர்கள் தமது வாழ்த்துரையில் எம்மைச் சுற்றி இராணுவம் நிற்கிறது மக்கள் கடையைச் சுற்றிக் கியூவில் நிற்கிறார்கள் நாங்கள் பதுக்கி வைத்து இப்பொழுது பொருள்களை வெளியில் விடுவதாகவும் பழி கூறுகிறார்கள். பசியோ, பட்டினியோ எங்களை எதுவும் செய்யாது.

—04ஆம் பக்கம் பார்க்க

# தபால் அறிமுக அட்டைகள் இன்னமும் கிடைக்கவில்லை

இம்முறை கப்பலில் பதிவுத் தபால்கள் வராததால் தபால் அறிமுக அட்டைகள், மற்றும் முக்கிய கடிதங்களை எதிர்பார்த்தோர் தபால் நிலையங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

எதிர்வரும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு சிலருக்கு இன்னமும் தபால் அறிமுக அட்டை அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 06

# விசர்நாய்க்கடி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்துக்கு(ஏ ஆர். வி ) விரைவில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அறியப்படுகின்றது.

யாழ் சுகாதார திணைக்களம் 5000 மில்லி லீற்றர் (ஏ. ஆர். வி.)விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து அனுப்பிவைக்குமாறு கொழும்பிலுள்ள மத்திய மருந்துக் களஞ்சியத்தை கேட்டிருந்தது

ஆனால் கடந்த வாரம் கப்பல் மூலம் 2000 லீற்றர் ஊசி மருந்தே இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

யாழ் போதனா வைத்திய சாலைக்கும் இதர அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் இந்த மருந்து பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 13

## உல்லாசப் பயணிகளாக வந்த

# ரஷ்யர் பேருவளை வீதியில் வியாபாரத்தில் மும்முரம்

ரஷ்யாவிலிருந்து உல்லாசப் பிரயாணிகளாக ஸ்ரீலங்கா வந்துள்ள குழுவினர் இப்போது பேருவளை நகரில் உள்ள தொடர் மாடி வர்த்தக நிலையத்துக்கு முன்னால் தாமும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதனைக் காண முடிவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேர்ட், பாவாடைகள்,காற்சட்டைகள், கடிகாரவகைகள் உட்பட பல பொருள்களை இவர்கள் விற்பனை செய்து வருகின்றனர் என்றும் அறிய வந்துள்ளது.

உள்ளூர் வாசிகள் இப்பொருள்களை வாங்குவதில் மிக ஆர்வம் காட்டி வருகின்றனராம்.

# வெளிச்சந்தையில் குத்தரிசி

இரண்டு கிலோ குத்தரிசி விநியோகிக்கும் போது கூட்டுறவுச் சங்கங்கள் உணவு அட்டையில் உள்ள 30ஆம் இலகத்தில் பதியவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புழுங்கல் அரிசி தேவையானவர்களுக்கு பங்கீட்டளவுக்கு மேற்படாது 2 கிலோ அரிசியை வெளிச்சந்தையில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 07, 06

# குளவி கொட்டி வயோதியர் பலி

பனங்காணிக்குச் சென்ற வயோதிபர் ஒருவர் குளவி கொட்டியதால் பலியானார்.

பருத்தித்துறை தும்பளை நீலர்வளவு வீதி யைச்சேர்ந்த க. சுப்பிரமணியம் (80) என்பவரே குளவி கொட்டியதால் பலியானவராவர். (11)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பொருள்கள் விலை வீழ்ச்சி

யாழ் மாவட்டத்துக்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றி வந்த பல லொறிகள் இங்கு வரமுடியாதநிலையில் கிளிநொச்சிப் பகுதியில் அப்பொருள்களை விற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் பொருள்களுக்குத்தட்டுப்பாடு இல்லை எனவும் மலிவாக வாங்கலாம் எனவும் தெரியவருகிறது. 06

# சுந்தர் பயணம்

யாழ் கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் நேற்று கப்பல் மூலம் கொழும்பு சென்றுள்ளார்.

எதிர்வரும் க. பொ. த. பரீட்சை தொடர்பாக இவர் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். (06)

# நாளை சமய பாடப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் சைவ சமய பாடப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை தவறாது நடைபெறு மெனவும் இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கௌரவ பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்துள்ளார். (18)

## பிரேமதாஸவின்...

காரணங்காட்டி கலந்து கொள்ளாததினை சுட்டிக்காட்டினார்.

''பிராந்திய நாடுகளுடன் பிரேமதாஸ நட்புறவினை நல்ல வகையில் பேண முயற்சிக்கவில்லை'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சார்க் மாநாடு நடைபெறாமல் போனமை அரசின் வெளிநாட்டுக் கொள்கை தோற்றுப் போனதையே காட்டுகின்றது

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒரு நாள் விவாதப்படுத்தப் பட வேண்டும் எனக் கோரவுள்ளோம்.

தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளிடையே தோன்றும் பிரச்சினைகளைப் பரஸ்பர ஒத்துழைப்பின்மூலம் தீர்க்க பிரேமதாஸ முயலவில்லை எனவும் அனுராபண்டார நாயக்கா மேலும் கூறினார்.

## மால்மா...

பிறே, லக்டோஜன் ஆகிய பாலமா வகைகள் எவரும் விற்கலாம் எனவும் 80 ரூபாவுக்கு மேல் விற்கக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 06, 07

## தனியார்...

முதற்கட்டமாக யாழ்உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 25 கடைகளும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்15 கடைகளும், சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவில் 15 கடைகளும் இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் இது நடை முறைப்படுத்தப்படும். 06, 07

## உணவுப்...

குமாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் எஸ். ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இருப்புப்பட்டியல்களைச் சமர்ப்பிக்கத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இவ் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் 200க்கும் அதிகமான கடைகள் இருந்தும் இதுவரை சுமார் 100 கடைகளின் அத்தியாவசிய உணவுப் பொருளகளின் இருப்பு பட்டியல்களேபாவனையாளர் பாதுகாப்புக்குழு விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

# கரைவரமுயன்ற படகுகளை புலிகள் தாக்கி விரட்டினர்

காரைநகர் திருவடிநிலை கடற்பகுதியில் கரைநோக்கி வரமுயன்ற கடற்படைபடகுகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

நேற்றுகாலை 9 மணியளவில் கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் பொன்னாலை திருவடிநிலை கடற்கரைப் பகுதியை நோக்கி வரமுயன்ற போது புலிகள் தாக்குதல் நடாத்தி விரட்டியடித்தனர்.

# கட்டுமரம் இரண்டாகியது

தாளையடி கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இரு மீனவர்கள் கட்டுமரம் ஒன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியால் அதிவேகமாகவந்த கடற்படை விசைப்படகு இக்கட்டுமரத்துடன் மோதியதால் அது இரண்டாக முறிந்தது.

இதனையடுத்து கட்டுமரத்தில் சென்ற சாந்தன், மரியதாஸ் குலாஸ் ஆகிய இருவரும் கடலில் தூக்கி வீசப்பட்டனர். மரியதாஸ் குலாஸ் என்பவர் நீந்திக்கரை சேர்ந்துள்ளார்,

ஆனால் கூடச்சென்ற சாந்தனின் நிலைமை என்னவென இதுவரை தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

சம்பவம் நடந்த இடத்தில் நின்ற கடற்படைப்படகு அப்பகுதியில் மின் வெளிச்சத்தைப் பாய்ச்சி தேடுதல் நடாத்தியதாகவும் சாந்தன் கைது செய்யப்பட்டிருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 27

## புதிய...

நிலை தொடர்பாகத் தகவல் நேற்று வெளியிட்டுள்ளார்

அவர் செயலகத்தில் பத்திரிகையாளருடனான கலந்துரையாடலின் போது இது சம்பந்தமாக மேலும் தெரிவிக்கையில்,'' மீதிப் பொருள்கள் தரைமார்க்கமாகவும் உள்ளூர் உற்பத்தியாகவும், மக்களுடைய குறைந்தளவு நுகர்வுகளினாலும் செய்யப்பட்டது'' என்றும் தெரிவித்தார்.

'அத்தியாவசியப் பொருள்கள் பங்கீடு தொடர்பாகப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படாதிருந்திருந்தால் சகல பொருள்களும் பதுக்கப்பட ஏழை,எளிய மக்கள் அவற்றை வாங்க முடியாத நிலை உண்டாகியிருக்கும். மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டிருப்பார்கள்

இதன் காரணமாகவே கப்பலில் வருகின்ற பொருள்களையும், வர்த்தகர்களிடமுள்ள பொருள்களையும் கணக்கிட்டு, பங்கீட்டு அடிப்படையில் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது இதனால் மக்கள் ஓரளவாயினும் பட்டினியிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி பிறந்திருக்கிறது'' எனவும் அவர் மேலும் விளக்கமளித்தார். 6, 7

## ஸ்ரீலங்கா...

கம் கண்டுள்ளதாக பிந்திய செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை இன்றுகாலை மற்றுமோர் சுற்றுப் பேச்சு பாகிஸ்தான் -ஸ்ரீலங்கா தலைவர்களிடையே நடைபெறவுள்ளதாக இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

## இந்திய...

வர் ஜாவிடமிருந்தும் இந்திய மத்திய அரசாங்கத்திடமிருந்தும் கண்டனம் தெரிவிக்கப்படும் நிலையுள்ளது என்று பி. பி, ஸி நேற்றிரவு கூறியது.

தன் மீது பாகிஸ்தான் அயல் நாடொன்றில் வைத்து தெரிவிக்கும் கண்டனமாகவே இந்தியா இதனைக் கருதும் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன,

ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் கிளர்ச்சியாளர்களுக்கு மறைமுக ஆதரவு வழங்கி வருவதாக இந்தியா தொடர்ந்து பகிரங்கமாக குற்றம் சுமத்திவருவதும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

## ஒரு நாள்...

நடாத்தினர்.

இது தொடர்பாக ஏனைய உறுப்பு நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடாத்தப்போவதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

தடைப்பட்ட மாநாடு 3நாள்களுக்கு நடைபெற இருந்தது தெரிந்ததே.

## எங்கள்...

கஷ்டங்களை ஏற்கப் பயிலுவது தான் எமது போராட்டத்தின் முதற் கட்டப் பயிற்சி கஷ்டங்களின் மத்தியிலேதான் நாம் விடுதலையை வென்றெடுக்க வேண்டும்என்றார்

நாதஸ்வரம் 12 வருடப் பயிற்சி பஞ்சமூர்த்தி அவர்களது தாத்தா பெரிய கலைஞர். அவரே பெரிய குருவாகவும் அமைந்தது பாக்கியம் அவ்வாறு பயிற்சியளிக்கும் நாதஸ்வரக் கலைக் கல்லூரியும், தவில் கலைக் கல்லூரியும் கீரிமலையில் அல்லது மாவிட்டபுரத்தில் நிறுவப்பட வேண்டும். எங்கள் குழலிலிருந்து வீரமும், உங்கள் குழலிலிருந்து நாதமும் புறப்படட்டும் இரண்டும் விடுதலைப் போரில் ஒன்றாக இணையட்டும் என்றார். (வளரும்)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 09.11.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.